# *Disc of Prosperity*

**( Iswarya Kolam)**

# ஐஸ்வர்ய கோலம்


**Written by**

**Santhipriya**
(nrj1945@gmail.com)

எழுதியவர்

சாந்திப்பிரியா
(nrj1945@gmail.com)

(*ஞான ஆலயம்*, ஏப்ரல், 2009 இதழில் வெளியான தமிழ் கட்டுரையின் விரிவாக்கப்பட்ட மறு பதிப்பு மட்டும் அல்ல, அதை ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்து கீழே தரப்பட்டு உள்ளது)



## *Disc of Prosperity* : ஐஸ்வர்ய கோலம்

Disc of Prosperity, popularly called Iswarya Kolam, not only bestow wealth as is generally propagated but also causes other personal problems melt away when genuinely worshipped. This is comparable to Sri Chakra , a powerful yantra worshipped for many decades. The Disc of Prosperity has mystic power. Goddess Sakthi appears in the form of Goddess Lakshmi in the disc, and she promises prosperity and relieve the agony of those who worship her with devotion. It is interesting to learn that she is surrounded by several powerful guardian deities occupying triangles and diamond shaped plates in the said disc.


ஐஸ்வர்ய கோலம் என்பது ஐஸ்வர்யம் எனகின்ற பொன், பொருளை (பணம்) தரும் கோலம் என நினைக்காதீர்கள். அது கோலம் அல்ல, அது ஸ்ரீ சக்கரம் போன்ற ஒரு எந்திரமே. அதில் பல அற்புதமான தத்துவங்கள் அடங்கி உள்ளன என்பதை பலரும் அறிய மாட்டார்கள். ஐஸ்வர்யம் கொழிக்கும் வாழ்வை, அதாவது அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய உன்னதமான வாழ்க்கையை உனக்கு தருவேன் என்பதை சக்தி தேவி குறிக்கும் வகையில் அமைந்துள்ளது ஐஸ்வர்ய கோலம். அந்த கோலம் சக்தியின் ரூபமான லஷ்மி மட்டும் அல்ல, ஈஸ்வரனின் கோலத்தையும் (காட்சி) நமக்குக் காட்டுகின்ற ஈ(ஐ)ஸ்வர்ய கோலம். ஐஸ்வர்ய கோலத்தில் ஈஸ்வரனின் கோலமா (காட்சி) என நினைக்கின்றீர்களா? அதுதான் அந்த கோலத்தில் உள்ள முக்கோண, நற்கோணங்களின் சுட்சமம், ஒன்றுக்குள் ஒன்று அடங்கி உள்ள சுட்சமம்.

### The relevance of various elements in the Iswarya Kolam

### ஐஸ்வர்ய கோலத்தின் அமைப்பில் உள்ள ஈஸ்வர்ய தன்மைகள் மற்றும் அதன் அமைப்பு என்ன?


Look at the diamond shaped glasses pasted in the centre. It is believed that while Lord Shiva and Goddess Sakthi occupy the upper and lower portion, Lord Brahma and Lord Vishnu with their consorts stand on either side to complete the form of Trimurthis. ( The six diamond shaped Red spots in the centre)

நடுவில் உள்ள நற்கோணங்களைப் பாருங்கள். மேலும் கீழும் (ஆகாயம் முதல் பாதாளம் வரை ) சிவ-சக்தியாக ஈஸ்வரர் நின்றிருக்க, இருபுறமும் மற்ற இரு மூர்த்திகளான பிரும்மாவும், விஷ்ணுவும் தத்தம் பத்தினிகளுடன் நிற்பதை காட்டும் பகுதி அது. (*நடுவில் உள்ள ஆறு சிவப்பு நற்கோணங்கள்*).



Goddess Lakshmi , another avathara of Goddess Sakthi is seen seated in the middle to grant boons to those who worship her in that form. ( In the middle of the six diamond shaped Red spots in the centre

கோலத்தில் உள்ள ஈஸ்வரரின் இருதயத்தில் சக்தியின் ஒரு அம்சமான இலஷ்மி தேவி அமர்ந்திருந்து, பக்தர்களுக்கு ஐஸ்வர்யத்தை தருவதான ஐதீகத்தைக் காட்டுவது இலஷ்மி தேவியின் படம். *(நடுவில் உள்ள ஆறு சிவப்பு நற்கோணங்களில் உள்ள படம்).*




The six divine rivers like Ganga, Kaveri, Yamuna, Narmada, Godavari and Krishna flow in the surrounding areas thus sanctifying the mind and places around her. Since the water is colorless and looks like crystal, it is shown in the form of a mirror, which is also colorless. ( See diamond shaped light blue spots)

அவர்களை சுற்றி கங்கை, காவேரி, யமுனை, நர்மதா, கோதாவரி மற்றும் கிருஷ்ணா போன்ற ஆறு புண்ணிய நதிகளின் தேவியினர் ஓடிக் கொண்டு சக்தி தேவியின் பக்தர்கள் மனதில் துாய்மையைத் தந்தவண்ணம் உள்ளனர். (ஆறு முகம் பார்க்கும் கண்ணாடி பதிந்த நாற்கோணங்கள்). முகம் பார்க்கும் கண்ணாடியை அந்த இடத்தில் ஏன் பயன்படுத்த வேண்டும்? நதியின் நீர் நிறமற்று ஸ்படிகம் போல தெளிவானது என்பதினால் அது அவ்வாறு காட்டப்படுகின்றது. *( நற்கோணத்தில் இளம் நீல நிறத்தில் காட்டப்பட்டு உள்ள பகுதி ).*



Twelve Yoginis known as guardian deities to Sakthi devi, all of whom have mystifying powers, occupy the next ring of twelve triangular spots. They are Vidya yogini, Resaka yogini, Mosika yogini, Amrutha yogini, Deepika yogini, Gyana yogini, Abyayini yogini, Vyabini yogini, Metha yogini, Vyomarupa yogini, Siddarupa yogini and Lakshmi yogini.( See the dark blue triangles )

அதற்கு அடுத்த அடுக்கில் உள்ளவை சக்தியைக் காத்து நிற்கும் பன்னிரண்டு பரிவார யோகினி தேவதைகளான வித்யாயோகினி, ரேசகாயோகினி, மோசிகாயோகினி, அம்ருதாயோகினி, தீபிகாயோகினி, ஞானயோகினி, அப்யாயினியோகினி, வியாபினியோகினி, மேதாயோகினி, வ்யோமரூபாயோகினி, ஸித்தரூபாயோகினி, மற்றும் லஷ்மியோகினி என்பன. *(கரு நீல முக்கோண வண்ணப் பகுதி)*



The next set of six triangular entrances are guarded by four Dwarabalaka deities along with two other guardian angels namely Vijaya and Jaya who always stand guard at the entrance of her abode in the temples. The four Dwarabalaka deities on four sides are, Kandakarshini in the east, Rasakarshini in the west, Rupakarshini in the south and Sparshakarshini in the northern side. ( See the dark Green triangles in between the blue triangles )


அந்த முக்கோணங்களின் இடையே அமைந்து உள்ள ஆறு முக்கோணங்களில் சக்தி தேவிக்கு காவலில் உள்ள நான்கு துவார தேவதைகளும் மற்றும் அவளுடைய நுழை வாயிலின் இருக்கும் இரு முக்கிய காவல் தேவதைகளான விஜயா மற்றும் ஜெயா என்ற தேவதைகளும் அமர்ந்து உள்ளனர். கிழக்கில் கந்தாகர்ஷிணி, மேற்கில் ரஸாகர்ஷிணி, தெற்கில் ரூபா கர்ஷிணி மற்றும் வடக்கு பக்கத்தில் ஸ்பர்ஸாகர்ஷிணி என நான்கு துவார தேவதைகளும் அமர்ந்து உள்ளனர். *( கரு நீல முக்கோணப் பகுதிகளின் இடையே உள்ள பச்சை நிற வண்ணப் பகுதி)*



The next six diamond shaped spot reflects the true state of mind of one who has eradicated six undesirable elements like lust, Anger, Greed, unethical attraction, Pride and arrogance ( Kama, Krotha, Moha, Mada, Loba and Matsaryam). Worshipping the devi with such a state of mind is sure to beget Vaikunda, the most blissful abode of Lord Vishnu. ( See diamond shaped light blue spots on the sides of green spots)


அடுத்த அடுக்கில் உள்ள ஆறு நற்கோணங்கள் காமம், குரோதம், லோபம், மோஹம், மதம், மற்றும் மத்சர்யம் போன்ற தீய ஆறு குணங்கள் அழிக்கப்பட்ட மன நிலையை காட்டும் விதத்தில் அமைந்துள்ளது. அந்த நிலையில் இருந்தபடி தேவியை

வேண்டுபவர்கள் விஷ்ணுபிரானின் வைகுண்ட பிராப்தி பெறுவார்கள். *(பச்சை நிறப் பகுதிக்கு பக்கத்தில் காட்டப்பட்டு உள்ள நற்கோண இளம் நீல நிறப் பகுதி ).*



Those who stand guard in the last ring of the Kolam is the eight guardian deities namely Vasini, Kameshwari, Mothini, Vimala, Aruna, Jayini, Sarveswari, Kali , another set of eight Sidda (magical Power) deities like Anima, Manima, Lahima, Karima, Prapthi, Prakamyam, Vacitvam and Echitvam. Gods like Sun and Moon occupy remaining two spots. ( See the numbered portions)

கடைசி அடுக்கில் உள்ளவர்கள் வசினி, காமேஸ்வரி, மோதினி, விமலா, அருணா, ஜெயினி, சர்வேஸ்வரி, மற்றும் காளி என்கின்ற எட்டு தேவதைகளும், அணிமா, மஹிமா, லஹிமா, கரிமா, பிராப்தி, ப்ராகாம்யம், வசித்வம், ஈசித்வம் என்கின்ற எட்டு சித்திக்களை கொண்ட எட்டு ஆவரண தேவதைகளும், மற்றும் சந்திரன், சூரியன் ஆகியோர். *( எண்கள் காட்டப்பட்டு உள்ள பகுதி )*



## *Go through the words in the Iswarya Kolam*

## *அடுத்து ஐஸ்வர்ய கோலத்தில் உள்ள வார்த்தைகளைப் பாருங்கள் :*

**Word Swarya denotes Eswar(y)a and his blessings**

**ஐந்து பூதங்களிலும் உள்ள ஈஸ்வர்ய அருளை குறிக்கும் வகையில் ஸ்வர்ய,**

**Swarya also reflects Swarga i.e happiness**

**சுவர்கத்தை குறிக்கும் வகையில் ஸ்வர்ய ( அனைத்து சுகம்) ,**

**Kolam in Tamil mean present form. The Kolam in Tamil thus indicates that the future will be full of happiness and prosperity.**

**காலத்தைக் குறிப்பதே கோலம். ஆகவே வர உள்ள மகிழ்வான காலத்தைக் குறிக்கின்றது ஐஸ்வர்ய (வே)காலம்.**

**In tamil language ariya means rare. Similarly Iswariya Kolam means rare eswara kolam.**

**அரிய எனறால் அபூர்வமானது என அர்த்தம். ஆகவே அபூர்வமான சக்தி பெற்ற ஈஸ்வர கோலம் இது.**

**The Kolam can be kept either in the Puja room or in any other room. There is no restriction. Okay, what do one gain by worshipping Iswarya Kolam ? Look below.**

**அந்த கோலத்தை பூஜை அறையில் மட்டும் அல்ல, வீட்டில் எங்கு வேண்டுமானாலும் மாட்டலாம். சரி, ஐஸ்வர்ய கோலத்தினை பூஜிப்பதினால் என்ன பலன் கிடைக்கும் ?**

- **Acquire more Wealth**
- **வீட்டில் செல்வம் பெருகும்**

- Abundant Happiness
- மகிழ்ச்சி தாண்டவமாடும்

- Derive mental peace
- மனதில் அமைதி கிடைக்கும்

- Evils and spirits will not enter the house. The guardian deities of Sakthi drives them away.
- காவல் தேவதைகள் தீய சக்திகளை, பேய் பிசாசுக்களை வீட்டிற்குள் நுழைய விடாது

- Reserve a place in Vaikunda , abode of Vishnu.
- வைகுண்டவாசியாவாய்

Those who pray Iswarya Kolam with devotion and belief are sure to derive the above benefits.
இப்படியாக பல நன்மைகளும் அந்த கோலத்தை நிறைவாகப் புரிந்து கொண்டு முறையாக பிரார்திப்பவர்களுக்குக் கிடைக்குமாம்.

## The procedure to the worship for a specific cause
## ஐஸ்வர்ய கோலத்தை பிரார்திக்கும் முறை என்ன ?

Generally the Kolam can be kept either in the worship place (Puja hall) or in any other room. If worshipped with devotion after lighting up a lamp filled with Ghee, one's persisting personal problem vanishes, so is the belief. The prayer for a particular cause is spread over to 45 days, to be commenced on the full moon day to end up at the $45^{th}$ day, i.e. Full moon (Pournami) - Black moon (Amavasya) - Full moon (Pournami) and a day before the next black moon (Amavasya). With its completion the intensity of the problem starts waning away from the $46^{th}$ day.

சாதாரணமாக ஐஸ்வர்ய கோலத்தை பூஜை அறையில் அல்லது வேறு எந்த இடத்திலும் மாட்டி வைத்து விட்டு நாற்பத்தி ஐந்து நாட்கள் அதன் முன் நெய் விளக்கு ஏற்றி வைத்து தமது பிரச்சனைகள் தீருவதற்கு பிரார்தனை செய்தால் அது நடக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. பௌர்ணமியில் வேண்டுதலைத் துவக்கி அம்மாவாசை, அடுத்த பௌர்ணமி, மீண்டும் அடுத்த அம்மாவாசைக்கு முதல் நாள் அன்று வேண்டுதலை முடிக்கும் பொழுது 45 நாட்கள் ஆகிவிடும். வேண்டுதல் முடிந்த மறு நாள் முதல் தேய்பிறை போல பிரச்சனைகள் மறையத் துவங்கும்.

**What is the procedure for the prayer? Write down the problem in a piece of paper, touch the Iswarya Kolam with the paper and keep it either in the Puja room or in a safe place. Lit a Ghee lamp, show it before the Iswarya Kolam praying for the relief from the problem written on the paper, and then keep the burning lamp in the puja room till the flame goes off. Do not lit off by yourself. Continue the prayer for 45 days. In case you have fallen sick or inconvenienced due to some reason or the other some one else from your family can continue to do it on your behalf. Even in the temples one can notice only the available priests' conduct pujas for the individuals who perform archana ( Prayer) for a specific cause continuously for few days. It is also similar to it. The only condition is that the prayer to Iswarya Kolam once commenced for a specific cause is be carried continuously for 45 days uninterrupted.**

பௌர்ணமியன்று பிரார்தனையை ஒரு காகிதத்தில் எழுதி அதை மடித்து வைத்து விட வேண்டும். பிரார்தனை எழுதி வைக்கப்பட்டுள்ள காகிதத்தினால் ஐஸ்வர்ய கோலத்தை ஒரு முறை தொட்டு விட்டு சாமி பீடத்தில் ஒரு இடத்தில் வைத்து விட வேண்டும். அதன் பின் ஒரு நெய் விளக்கை ஏற்றி தமது பிரார்தனை பலிக்க வேண்டும் என மனதில் நினைத்துக் கொண்டு ஐஸ்வர்ய கோலத்திற்கு முன் அதை காட்டி விட்டு (கற்பூர தீபாரனைப் போல) சாமி அறையில் வைத்து விட வேண்டும். ஹாலில் மாட்டப்பட்ட படத்திற்கும் அதை செய்யலாம். தொடர்ந்து நாற்பத்தி ஐந்து நாட்கள் பிரார்தனை எழுதப்பட்டு உள்ள காகிதத்தால் ஐஸ்வர்ய கோலத்தை ஒரு முறை தொட்டு விட்டு நெய் விளக்கை ஏற்றி அதை ஐஸ்வர்ய கோலத்திற்கு முன் காட்டிவிட்டு வைத்து விட வேண்டும். அசௌர்கிய நாட்களிலும், முடியாத தினங்களிலும் வேண்டுதல் எழுதி வைக்கப்பட்டு உள்ள காகிதம் மாற்றப்படுவதில்லை என்பதினால் வீட்டில் உள்ள வேறு எவர் வேண்டுமானாலும் அதை தொடர்ந்து செய்யலாம். ஆலயத்தில் பல அர்ச்சகர்கள்

தெய்வத்திற்கு அர்சனை செய்வது போன்றதே இதுவும். ஆனால் நாற்பத்தி ஐந்து நாட்கள் தொடர்ந்து அதை செய்ய வேண்டுதல் பலிதமாகுதாம்.

## இப்படிப்பட்ட சிறப்பான கோலம்
## நமக்கு கிடைக்குமா ?
## Can we get it or make at home ?


**Wondering how to get the Iswarya Kolam? Don't worry. See below the practical work guide to make one by yourself at home. If you can not procure the material locally, few of you can request some one traveling to India to procure the said items in bulk, say material to make 10-15 pieces and then do it in a community class in temples or weekends.**

ஆமாம், அந்த சக்தி வாய்ந்த ஐஸ்வர்ய கோலத்தை எப்படிப் செய்வது என கவலை வேண்டாம். அதை வீட்டிலேயே தயாரிக்கும் விதத்தைப் பற்றிய பாடத்தை கீழே காணலாம். நீங்கள் உள்ள இடத்தில் பொருட்கள் கிடைக்கவில்லை எனில் எவர் மூலமாவது இந்தியாவில் இருந்து 10-15 தட்டு செய்யத் தேவையான அளவு பொருட்களை வரவழித்துக் கொண்டு ஒரு குழுவாக அமர்ந்து அதை செய்யலாம்.

# Practical lesson செய்யும் முறை

## *Disc of Prosperity* ஐஸ்வர்ய கோலம்

சாந்திப்பிரியா
(nrj1945@gmail.com)



ஐஸ்வர்ய கோலம்

## பாடம் -1


---

### How will you calculate the size of the disc?

### ஐஸ்வர்ய கோலத்தின் தட்டு எந்த அளவு இருக்க வேண்டும்?

It depends on your requirement and based on the size of Glass pieces selected for preparing the Kolam. Generally one may use 3/4th or 1" wide glass pieces to prepare the Kolam. To work out the size of disc for 3/4th or 1" width glass pieces, the calculation be done as given below.

அது உங்களுடைய விருப்பத்தைப் பொறுத்தது. ஆனால் அது நீங்கள் பயன்படுத்த இருக்கும் கண்ணாடித் துண்டுகளின் அளவைப் பொறுத்தது. சாதாரணமாக முக்கால் அல்லது ஒரு அங்குல முக்கோண கண்ணடிகளினால் செய்த கோலத்தை பூஜை அறைகளில் மாட்டுகின்றனர். உதாரணமாக 1” அல்லது ¾” அளவிலான கண்ணடி துண்டுகள் பதித்த கோலம் வேண்டும் எனில் அதற்குத் தேவையான வட்ட தட்டின் சுற்றளவு எவ்வளவு இருக்க வேண்டும் என்பதை கணக்கிட கீழே தரப்பட்டு உள்ள கணித முறைகளைப் பார்க்கவும்.





a) First decide the length of **A**

முதலில் **A** யின் அளவு தேவை என தீர்மானிக்கவும்

b) In the event you decide to use 1” wide glass pieces, then the length of the longer side of the Diamond will be as below:

உங்களுக்கு 1” உயர கண்ணாடி துண்டுகள் கொண்ட கோலம் வேண்டும் எனில் ஒரு நாற்கோண கண்ணாடித் துண்டின் உயரம் கீழ்கண்டவாறு இருக்கும்:




**1” + 1” = 2” X 0.9 i.e 1.8”**

c) Similarly if you have chosen 2” wide glass pieces, then the length of the longer side of the Diamond will be :

அது போல 2” உயர கண்ணாடி துண்டுகள் கொண்ட கோலத்தில் உள்ள நாற்கோண கண்ணாடித் துண்டின் உயரம் கீழ் கண்டவாறு இருக்கும்

**2” + 2” = 4” X 0.9 i.e 3.6”**

d) Therefore the length of the Kolam in the disc, i.e **A** with 1" glass pieces will be

ஆக 1" உயர கண்ணாடி துண்டுகள் கொண்ட கோலத் தட்டில் உள்ள கோலத்தின் உயரம், அதாவது **A** யின் அளவு

1.8" X 4 = 7.2"

e) Next decide the blank space around the Kolam i.e **B** and **C.** Supposing you want ¾", then the required size of the disc will be:

தட்டில் தேவையான வெற்று இடம் ¾" தேவை எனில் தட்டின் மொத்த அளவு , அதாவது **B** மற்றும் **C** பகுதியுடன் சேர்த்து கீழ்கண்டவாறு இருக்கும்.

= {1.8"('b' above) x 4 } + {¾"( *B)}* + {¾"( *C)}* = 8.7" அதாவது சுமார் 9"

f) Similarly if the space required is 1", then the size of the disc will be as below:

அது போல உங்களுக்கு 1" வெற்றிடம் தேவை எனில் தட்டின் அளவு கீழ்கண்டவாறு இருக்கும்.

= {1.8" *('b' above) x* 4} + {1" *(*B*))* + {1" *(*C*)}* = 9.2" அதாவது சுமார் 9.5"

g) Thus the calculation of the size of various material required for procurement will be done prior to commencing the work.

இப்படியாக உங்களுக்குத் தேவையான அளவில் கண்ணாடித் துண்டுகளும், தட்டின் அளவும் கணக்கிடப்பட்டு அவற்றை வாங்க வேண்டும்.

## Lesson -2 பாடம் -2

---

## Material required for the Iswarya Kolam


### கோலம் செய்யத் தேவையான பொருட்கள்

A) Thick ply of 4 mm thick or block board ( A compressed wooden board with rough finish on the back side )

பாடம்-1 ல் குறிப்பிட்ட அளவில் வெட்டப்

பட்ட 3 அல்லது 4 சென்டிமீட்டர் பருமனான


பிளை அல்லது பிளாக் போர்டு = 01



**B)** Triangle shaped glass pieces

முக்கோண வடிவில் வெட்டப்பட்ட கண்ணாடித்


துண்டுகள் = 36



**C)** Diamond shaped glass pieces

நாற்கோண வடிவில் வெட்டப்பட்ட கண்ணாடித்


துண்டுகள் =06




**E)** Diamond shaped Mirror Glass pieces

நாற்கோண வடிவில் வெட்டப்பட்ட முகம்

பார்க்கும் கண்ணாடித் துண்டுகள் : =12



**F)** Jarri Paper ( Shining golden paper) strips in 2-3 mm width or Golden color Cello tape



2 மி.மீ அகலத்தில் வெட்டப்பட்ட தங்க நிற ஜரிகை

பேப்பர் அல்லது தங்க நிற செல்லோ டேப் ரோல்

As per requirement ஒட்டத் தேவையான அளவு

**G)** Fevicol to paste the glass pieces and paper


கண்ணாடி மற்றும் பேப்பரை ஒட்டத்

தேவையான அளவு பெவிகால் பசை



As per requirement ஒட்டத் தேவையான அளவு

**H)** Small quantity of colored paint. Even oil paint will work



கண்ணாடியில் பெயிண்டிங் செய்ய

தேவையான அளவு வண்ண பெயிண்ட்

**I)** Goddess Lakshmi moulded pieces



பிளாஸ்டிக் மோல்டட் தட்டையான லஷ்மி

படம் (பிரேம் போடும் கடைகளில் கிடைக்கும்)

J) ¼ or ½" Brushes


¼ அல்லது ½" அகல பிரஷ்



## Lesson -3 பாடம் -3

First of all decide the colour scheme for the Iswarya Kolam based on some of the sample color scheme shown. It is for you to decide the colour scheme to suit your desire. However keeping Red, Blue and yellow or Green is considered auspicious.

கோலம் எந்த வண்ணத்தில் அமைய வேண்டும் என்பதை முடிவு செய்து கொள்ளவும். மாதிரிக்கு சில வண்ணப் படங்கள் கீழே கொடுக்கப்பட்டு உள்ளன. வேறு வண்ணம் போடலாம் என எண்ணினால் அதை நீங்களே முடிவு செய்து கொள்ள வேண்டும். ஆனால் சிவப்பும் , நீலமும் , மஞ்சள் அல்லது பச்சை வண்ணங்கள் அதில் உள்ளது சிறப்பாகும்.





## Colored Glass pieces and mirror pieces required for making the Iswarya Kolam


கோலம் செய்யத் தேவையான வண்ணம் தீட்டப்பட மற்றும் முகம் பார்க்கும் கண்ணாடித் துண்டுகள்

Once the color scheme is decided, then paint the glasses evenly and allow them to completely dry. The colors shown in the succeeding part is based on the model shown in page No 1.

அதற்கேற்ப முதலில் வெட்டி வைக்கப்பட்டு கண்ணாடித் துண்டுகளை கலர் பெயிண்டினால் பெயிண்ட் செய்து காய வைக்கவும் . வண்ணம் முழுமையாகக் காய வேண்டும். இங்கு காட்டப்பட்டு உள்ள வண்ணங்கள் 1 ஆம் பக்கத்தில் காட்டப்பட்டு உள்ள மாதிரிப் படத்தை அடிப்படையாகக் கொண்டது.














## Lesson -4 பாடம் -4

Once you have finalized the colour scheme , start making the disc by first pasting the six Red colored Diamond shaped glass pieces (Refer page 1) as shown below, from the centre of the disc. Apply Fevicol on the painted side and paste it.


வண்ணத்தை முடிவு செய்தப் பின் வண்ணம் தீட்டப்பட்ட கண்ணாடித் துண்டுகளை கீழ் கண்டபடி தட்டின் மையப் பகுதியில் இருந்து ஒட்டத் துவங்கவும். வண்ணம் தீட்டப்பட்ட பக்கத்தில் பெவிகால் தடவி தட்டு மீது ஒட்டவும். முதலில் சிவப்பு வண்ணம் தீட்டப்பட்ட ஆறு நாற்கோண கண்ணாடித் துண்டுகளை (பக்கம் 1 ல் உள்ள வண்ணப் படத்தைப் பார்க்கவும்) தட்டின் மையப் பகுதியில் இருந்து கீழ் கண்டபடி ஒட்டத் துவங்கவும்.




## Lesson -5 பாடம் -5

Next paste the six diamond shaped Mirror glass pieces (Refer page 1) as shown below, above the six Red colored diamond shaped glass pieces already pasted in the centre of the disc. Apply Fevicol on the saffron color side and paste it.

அடுத்து முகம் பார்க்கும் கண்ணாடியில் வெட்டப்பட்ட ஆறு நாற்கோணக் கண்ணாடித் துண்டுகளை (பக்கம் 1 ல் உள்ள வண்ணப் படத்தைப் பார்க்கவும்) கீழ் கண்டபடி முதலில் ஒட்டிய கண்ணாடிகளுக்கு மேற்புறம் ஒட்டத் துவங்கவும். கண்ணாடியின் பின்புறம் காவி நிறத்தில் உள்ள பக்கத்தில் பெவிகால் தடவி தட்டு மீது ஒட்டவும்.




## Lesson- 6 பாடம் -6

---

Next paste the twelve blue colored triangle shaped glass pieces (Refer page 1) as shown below, above the six Mirror diamond shaped glass pieces already pasted. Apply Fevicol on the painted side and paste it.


அடுத்து நீல வண்ணம் தீட்டப்பட்ட பன்னிரண்டு முக்கோண (பக்கம் 1ல் உள்ள வண்ணப் படத்தைப் பார்க்கவும்) கண்ணாடித் துண்டுகளை கீழ் கண்டபடி, முகம் பார்க்கும் கண்ணாடியில் வெட்டப்பட்ட கண்ணாடித் துண்டுகளை ஒட்டியதற்கு மேற்புறம் ஒட்டத் துவங்கவும். வண்ணம் தீட்டப்பட்ட பக்கத்தில் பெவிகால் தடவி தட்டு மீது ஒட்டவும்



## Lesson-7 பாடம் -7

Now start pasting the second set of six green colored triangle shaped glass pieces (Refer page 1) as shown below, in-between the blue colored triangle glass pieces already pasted. Apply Fevicol on the painted side and paste it.


இரண்டாவது வண்ணம், அதாவது பச்சை நிறம் தீட்டப்பட்ட ஆறு முக்கோண கண்ணாடித் துண்டுகளை (பக்கம் 1 ல் உள்ள வண்ணப் படத்தைப் பார்க்கவும்) கீழ் கண்டபடி முகம் பார்க்கும் கண்ணாடி துண்டின் மேல்புறம் ஒட்டப்பட்டு உள்ள இரண்டு முக்கோண கண்ணாடிகள் நடுவில் ஒட்டத் துவங்கவும். வண்ணம் தீட்டப்பட்ட பக்கத்தில் பெவிகால் தடவி தட்டு மீது ஒட்டவும்



## Lesson-8 பாடம் -8

Start pasting the six Mirror diamond glass pieces (Refer page 1) as shown below, above the blue colored triangle glass pieces already pasted. Apply Fevicol on the saffron colored side and paste it.

முகம் பார்க்கும் கண்ணாடியில் வெட்டப்பட்ட அடுத்த ஆறு நாற்கோண கண்ணாடித் துண்டுகளை (பக்கம் 1 ல் உள்ள வண்ணப் படத்தைப் பார்க்கவும்) கீழ் கண்டபடி முதலாவதாக ஒட்டிய நீல நிற வண்ண முக்கோணக் கண்ணாடிகளுக்கு இடையில் ஒட்டத் துவங்கவும். கண்ணாடியின் பின்புறம் காவி நிறத்தில் உள்ள பக்கத்தில் பெவிகால் தடவி தட்டு மீது ஒட்டவும்.




## Lesson-9 பாடம் -9

---

**Start pasting the twelve Red painted triangle glass pieces (Refer page 1) above the second layer of mirror glasses as shown below. Apply Fevicol on the painted side and paste it.**


**முகம் பார்க்கும் கண்ணாடியில் வெட்டப்பட்ட இரண்டாவது அடுக்கு கண்ணாடித் துண்டுகளின் மேல் பகுதியில் கீழ் கண்டபடி பன்னிரண்டு சிவப்பு நிற முக்கோணக் கண்ணாடிகளை** (பக்கம் 1 ல் உள்ள வண்ணப் படத்தைப் பார்க்கவும்) **ஒட்டத் துவங்கவும். வண்ணம் தீட்டப்பட்ட பக்கத்தில் பெவிகால் தடவி தட்டு மீது ஒட்டவும்**



## Lesson -10 பாடம் -10

Start pasting the six blue painted triangle glass pieces (Refer page 1) in between the Red colored triangle glass pieces already pasted above the second layer of mirror glasses. Apply Fevicol on the painted side and paste it.


முகம் பார்க்கும் கண்ணாடியில் வெட்டப்பட்ட இரண்டாவது அடுக்கு கண்ணாடித் துண்டுகளின் மேல் பகுதியில் ஒட்டப்பட்ட பன்னிரண்டு சிவப்பு நிற முக்கோணக் கண்ணாடிகளின் இடையே ஆறு நீல நிற முக்கோணக் கண்ணாடிகளை (பக்கம் 1 ல் உள்ள வண்ணப் படத்தைப் பார்க்கவும்) ஒட்டத் துவங்கவும். வண்ணம் தீட்டப்பட்ட பக்கத்தில் பெவிகால் தடவி தட்டு மீது ஒட்டவும்



## Lesson-11 பாடம் -11

Now start pasting the Jarri paper (gold enameled paper) to cover the gaps shown in between the pasted glass pieces. You can also use the Golden coloured cello tape to paste in those areas. It is readily available in the market.

இனி தட்டில் ஒட்டப்பட்டு உள்ள கண்ணாடித் துண்டுகளின் இடையே 2-4 செ.மீ அகலத்திற்கு வெட்டப்பட்டிருந்த ஜரிகை பேப்பரை கீழ் காட்டியபடி ஒட்டிவிட வேண்டும். இல்லை எனில் தங்க நிற செல்லோ டேப்பினாலும் ஒட்டலாம். அதனால் கண்ணாடி துண்டுகளுக்கு இடையிலான பகுதிகளில் உள்ள குறைபாடுகளும் சீரில்லாத இடைவெளிகளின் குறைகளும் மறைந்து விடும்.





## Lesson-12 பாடம் -12

---

**Similarly paste the Jarri paper (gold enameled paper) on the outer edges of the pasted portion. When completed, it will appear like a golden plate.**


**அது போலவே தட்டில் ஒட்டப்பட்டு உள்ள கண்ணாடித் துண்டுகளின் வெளிப் பகுதிகளிலும் பெரிய அளவிலான ஜரிகை பேப்பரை கொண்டு கீழ் காட்டியபடி ஒட்டிவிட வேண்டும். அது ஒரு தங்க நிறத் தட்டில் ஒட்டப்பட்டுள்ள ஐஸ்வர்ய கோலம் போல தோற்றம் தரும்.**



## Lesson-13 பாடம் -13

Next paste the Lakshmi devis sticker in the manner shown below in the middle of the disc.

அடுத்து தட்டின் மையப் பகுதியில் ஒரு இலஷ்மி தேவியின் படத்தை கீழ் காட்டியவாறு ஒட்டவும் .



## Lesson-14 பாடம் -14

If you want to add beauty to the Iswarya Kolam then you can paste eight more lakshmis on the finished board in the manner shown below. However it will neither add power to the Kolam , nor reduce it in any way.

ஐஸ்வர்ய கோலம் இன்னும் அழகாக இருக்க வேண்டும் என விரும்பினால் தட்டின் மையப் பகுதியில் உள்ள இலஷ்மி தேவியின் படத்தை சுற்றி இன்னும் எட்டு

இலஷ்மி தேவியின் படத்தை கீழ் காட்டியவாறு ஒட்டலாம். ஆனால் அது அழகிற்குத்தானே ஒழிய அதனால் சக்தி கூடிவிடாது.




## Lesson-15 பாடம் -15

### முக்கியமான சில குறிப்புக்கள்

1) ஐஸ்வர்ய தட்டு செய்ய பயன்படுத்த வேண்டிய வட்டத் தட்டு பிளாக் போர்ட் அல்லது பிளையில் இருக்கலாம். அல்லது வேறு எதாவது உயர்ந்த ரக மரப் பலகையிலும் செய்யலாம். எந்த மரப் பட்டையை உபயோகித்தாலும் அது வளையாமல் இருக்க வேண்டும் என்பதே முக்கியம். நீங்கள் படத்தை கண்ணாடி பிரேமுக்குள் வைக்க இருந்தால் மிகவும் பருமனான காகித போர்டிலும் அதை செய்யலாம்.


2) While using the Jari ( Glittering ) paper, ensure that the paper is cut in any one direction for use in all the areas. The embedded design element will otherwise glaringly show shade variation in different places . See the design shown below.


ஒட்டப்படும் ஜரிகை பேப்பர் பயன் படுத்தும் பொழுது ஒன்றை கவனமாகப் பாருங்கள். முடிந்தவரை ஒரே திசையில் வெட்டிய பேப்பரை தட்டின் வெற்று இடங்களில் பயன் படுத்தவும். இல்லை எனில் அதில் உள்ள டிஸைன், ஒவ் ஒரு இடங்களிலும் அதிக அல்லது குறைந்த பளபளப்பைக் காட்டி காகிதம் ஒட்டப்பட்டுள்ளதை தெளிவாகக் காட்டிவிடும்.




3) **While cutting the glass into diamonds and triangles, one should ensure that the glasses are cut in the following manner suggested, lest the glass cut pieces may not sit in perfection to complete the Kolam. The glass pieces should not be got cut into to exact square from which the triangle are cut out.**

**கண்ணாடி துண்டுகளை வெட்டி வரும் பொழுது மிகவும் கவனமாக பார்கப்பட வேண்டியது வெட்டும் முறை. கண்ணாடியை கீழ் கண்டபடி வெட்டச் சொல்ல வேண்டும். முதலில் வெட்டிய நாற்கோணத்தில் இருந்து முக்கோணத்தை வெட்ட வேண்டும். இல்லை எனில் கண்ணாடித் துண்டுகள் பக்கத்துப் பக்கத்தில் சரியாக உட்காராது.**



இதில் ஐஸ்வர்ய கோலம் பற்றிய விளக்கத்தையும் செய் முறை விளக்கத்தையும் தந்துள்ளேன். இதை படிக்கும் அனைவரும் தெய்வீக அருளைப் பெறுவார்கள் என்ற சந்தேகம் இல்லை. இதில் உள்ள செய்திகளைப் பற்றி உங்களுடைய மேலாக கருத்துக்களையும் மேலும் தேவையான குறிப்பும் தேவை எனில் nrj1945@gmail.com என்ற இணையதளத்திற்கு எழுதவும்.

சாந்திப்பிரியா

பெங்களூர்-76